# பொலிஸ் இன்ஸ்பெக்டரைத் தாக்கிய வழக்கில் பொல்காவல யு.என்.பி. எம்.பி ரஞ்சன் குற்றவாளி

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 3 5-8-86 செவ்வாய் (ஆடி 20 துல்க 28) முழக்கம் 182

## தீர்ப்பு 25ல் வழங்கப்படும்

பொல்காவல தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திரு. சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார். முன்னாள் பொல்காவல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. குணதிலகாவை தாக்கியது, அவரது மனைவிக்கு பயமுறுத்தல் விடுத்தது, அவரது வீட்டினை சேதப்படுத்தி அவமதித்தது ஆகிய குற்றச்சாட்டுகளிலேயே திரு ரஞ்சன் ஜெயக்கொடி குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார். கொழும்பு பிரதான மாஜிஸ்ரேட் குலன் அமரசிறி இவ்வழக்கு தொடர்பாக நேற்று வழங்கிய தீர்ப்பில் திரு. ரஞ்சன் ஜெயக்கொடி சந்தேகத்திற்கிடமில்லாமல் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார். இவருக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனை வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்குவது இம்மாதம் இருபத்தி ஐந்தாம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் முதற் தடவையாக பொல்காவல எம். பி. யாகத் தெரிவுசெய்யப்பட்ட சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி முன்னர் இலங்கை ராணுவப் படையில் கடமையாற்றியுள்ளார்.

★ அமைச்சர் தொண்டமானின் பிரத்தியேக பேட்டி

# முஸ்லிம் மாகாணம் உருவானல் வடகிழக்கு இணைப்பு சாத்தியம்!

## "தமிழ் மாகாண சபை"க்கு போட்டியின்றி உறுப்பினர் தெரிவாக வேண்டும் என்கிறார்

(கொழும்பு)

"கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் தங்களுக்கென ஒரு தனியான மாகாணத்தை உருவாக்குவார்களானல், அங்குள்ள தமிழ் மாவட்டங்களை வடக்குடன் இணைத்து "தமிழ் மாகாண சபை" ஒன்றை அமைப்பதில் எந்தச் சிக்கலும் ஏற்படாது" என்று அமைச்சர் எஸ். தொண்டமான் 'ஈழமுரசு'வுக்கு அளித்த பிரத்தியேக பேட்டியொன்றில் தெரிவித்தார்.

வடக்கும் கிழக்கும் இணைந்த மாநில சபைதான் தமிழர் பிரச்சினைக்கு உகந்த தீர்வு என்பதை உணர்ந்தே 1984 சர்வகட்சி மாநாட்டில் இந்த யோசனையை தனது தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன் வைத்தது எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினர்.

தமிழ்ப் போராளிகளின் இடைவிடாத போராட்டமும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் நேர்மையான பேச்சு வார்த்தைகளும்தான் இலங்கை அரசின் இன்றைய மனமாற்றத்துக்கு முக்கிய காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்குடன் கிழக்கின் தமிழர் பகுதிகளும் இணைவதால் ஏற்படும் தமிழ் மாகாண ஆட்சியில் "இளம் இரத்தங்களுக்கும்" உரிய இடம் வழங்கப்பட வேண்டும்என்றும் சுட்டிக்காட்டிய அமைச்சர் தொண்டமான் பிரச்சினைக்கு இறுதியான தீர்வு காணப்படுமுனைர் போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் எனநிபந்தனையிடுவதைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல்கள் பற்றி அமைச்சர் விபரிக்கையில், தமிழர் மாகாணசபைக்கு தேர்தல் நடைபெறுமலேயே

—6ம் பக்கம் பார்க்க

## லண்டன் ஹோட்டலில் ராஜீவை கொல்லச் சதி!

(லண்டன்)

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியை அவர் லண்டனில் தங்கியிருந்த ஹோட்டலில் வைத்து கொலைசெய்ய எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு எலிஸபெத் மகாராணியார் அளித்த இரவு விருந்தில் கலந்துகொள்ள ராஜீவ் சென்ற பின்னர், அவர் தங்கியிருந்த ஹோட்டலில் இரண்டு "பாக்"குகள் அனாதரவாகக் கிடக்கக் காணப்பட்டன. இதனல் ராஜீவ் காந்தியை உடனடியாக ஹோட்டலுக்குத் திரும்ப வேண்டாமெனப் பணித்தனர்.

—6ம் பக்கம் பார்க்க.

யாழ். பழைய பூங்காவிலுள்ள

## அரச அதிபர் வாசஸ்தலம் உடைக்கப்பட்டுச் சேதம்!

யாழ்ப்பாணம் செயலகத்துக்கு முன்னுலுள்ள பழைய பூங்காவுக்குள்ளிருக்கும் அரசாங்க அதிபரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலம் நேற்று முன்தினமிரவு இனம் தெரியாதவர்களால் சேதப்படுத்தப் பட்டுள்ளது.

வாசஸ்தலத்துக்குள் புகுந்த இனம் தெரியாதவர்கள் அங்கிருந்த கதவு, யன்னல்கள், மற்றும் தளபாடங்களைச் சேதப் படுத்தியதாக கூறப்படுகின்

—6ம் பக்கம் பார்க்க

## சந்நிதிக்கு சென்ற வயோதிபர் சூடுபட்டுப் படுகாயமுற்றார்!

(வல்வெட்டித்துறை)

பக்திப் பரவசத்தால் முருகனைத் தரிசிக்க எண்ணி தொண்டமானறு செல்வச்சந்நிதி கோயிலுக்குள் போவதற்காக, ஆலயத்தின் வடபுறமுள்ள கிணற்றில் கால்கழுவச் சென்ற அறுபது வயது வயோதிபர் ஆற்றின் மறுகரையிலிருந்து இராணுவத்தினரால் சுடப்பட்டார். இச்சம்பவம் நேற்று மாலை நடைபெற்றது.

கழுத்திலும், கை, கால்களிலும் சூடுபட்ட வயோதிபர் அவ்விடத்திலேயே வீழ்ந்துவிட்டார்.

இதனை அறிந்த விடுதலைப் புலிகள் இயக்க போராளிகள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில், பலத்த பாதுகாப்புடன் வீழ்ந்து கிடந்த வயோதிபரை அவ்விடத்திலிந்து அகற்றி ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளனர்.

முத்திரைகளும் கொள்ளை:

## காணிப்பதிவு கந்தோரில் பல உறுதிகள் மாயமாகின!

யாழ். பழைய பூங்காவிலுள்ள காணிப் பதிவுக் கந்தோரிலிருந்து பெறுமதிமிக்க பல உறுதிகள் களவாடப்பட்டுள்ளதாக உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

முப்பத்து நான்காயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட சுமார் முப்பது உறுதிகளே இவ்வாறு

— 6-ம் பக்கம் பார்க்க

ஈ. பி. ஆர். எல். எப். அறிக்கை:

## இராணுவத்தின் அச்சம் காரணத்தாலேயே வயாவிளான் முகாம் மூடப்படவுள்ளது!

"வயாவிளான் மினி இராணுவ முகாமின் மீது மக்கள் விடுதலைப்படையும் ஏனைய சக இயக்கங்களும் மேற்கொண்ட தாக்குதல்களினல் இராணுவத்தினர் அச்சமடைந்துள்ளனர். இதனல் அவர்கள் முகாம்களை விட்டு ஓடும் நிலையைத் தவிர்ப்பதற்காகவே அரசாங்கம் வயாவிளான் மகா வித்தியாலய மினி இராணுவ முகாமை மூடுவது பற்றி முடிவெடுக்க வேண்டி ஏற்பட்டது" என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில்கூட மக்கள் விடுதலைப் படை வயாவிளான் முகாமின் மீது மேற்கொண்ட தாக்குதலில் பதினன்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அண்மையில் கோட்டை முகாம் மீது மேற்கொள்ளப்

—6ம் பக்கம் பார்க்க

## பல்கலைக்கழக பரீட்சை

யாழ். பல்கலைக்கழகத்தின் கலை, விஞ்ஞான, மருத்துவ பீடங்களுக்கு 1986/87 கல்வியாண்டுக்கு அனுமதிபெற்றுள்ள மாணவர்களுக்கான ஆங்கிலத் தகுதிகாண் பரீட்சை நாளை ஆறும் திகதி காலை பத்து மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

## முகாமுக்கு செல்ல விடாது 'சென்றி' திருப்பி விட்டது

பலாலி ராணுவ முகாமுக்கு வருமாறு யாழ்ப்பாணத்திலுள்ள பத்திரிகை அலுவலகமொன்றின் ஊழியர்கள் அழைக்கப்பட்டனராயினும், அவர்களை முகாமுக்குச் செல்ல விடாது "சென்றி" இளைஞர்கள் திருப்பி அனுப்பி விட்டனர்.

அண்மையில் வெளியான செய்தியொன்று தொடர்பாகவே குறிப்பிட்ட நிறுவன ஊழியர்கள் முகாமுக்கு

—6ம் பக்கம் பார்க்க

## ஒரு இரவில் ஒரே வீதியில் 4 இடங்களில் திருட முயற்சி

(கல்வியங்காடு)

திருநெல்வேலி கிழக்கு ஆடியபாதம் வீதியில் நான்கு இடங்களில் நேற்று இரவு திருட்டும், திருட்டு முயற்சியும் நடைபெற்றுள்ளது. ஒரு கோவில், அலுமினியம் தொழிற்சாலை, சைக்கிள் கடை, இரும்புத் தொழிலகம் ஆகிய இடங்களிலேயே இவை இடம் பெற்றுள்ளன.

அலுமினியத் தொழிற்சாலையின் கதவு உடைக்கப்பட்டு உள்ளே சில பொருட்கள் களவாடப்பட்டிருந்தன. இரும்புத் தொழிலகத்தில் திருடர்களின் நடமாட்டம் இருந்ததற்கான அடையாளங்கள் காணப்பட்டன. சைக்கிள் கடையின் கதவும் உடைக்கப்பட்டு சில சாவிகள் திருடப்பட்டிருந்தன ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் கோவில் உண்டியலின் வெளிக்கதவு

—6ம் பக்கம் பார்க்க

இன்று சந்நிதி வேலவன் கொடியேற்றத் திருநாள்

# இராணுவ சூட்டுச்சத்தங்களால் சந்நிதியான் செவிடாகினனோ?

(வல்வை நிருபர் மு. துரைரத்தினம்)

தொண்டமானாறு செல்வச் சந்நிதிக் கந்தனின் ஆலய மணி கேட்டு, பக்திப்பரவசமடையும் ஆலயத்தில், அன்னதானக் கந்தனின் கருணையால் வழங்கப்பட்டுவரும் அன்னதானத்தினை உண்டு, ஆற்றங்கரையானின் காலடியில் தஞ்சமடைந்திருக்கும் பரமபக்தர்களும், சுற்றுடல் கிராமங்களில் வதியும் மக்களும், முருகனின் மணியோசையினைக் கேட்காது பீடைபிடித்தவர்கள் போன்று இருக்கின்றனர்.

இன்று சந்நதிக் கந்தனின் கொடியேற்ற நாள். இந்த அரிய நாளுக்காகக் காத்திருக்கும் அடியவர் கூட்டம், ஒரு வாரத்துக்கு முன்னரேயே அமளி துமளிப்படும் ஆலய மடங்கள், ஆலய வீதிகள், தொண்டமானாற்றுப் பாலத்தடியிலுள்ள சந்தி, சுறுசுறுப்பாக இயங்கும் சுற்றுப்புற வீதிகள் எல்லாம் இன்று சனநடமாட்டமின்றி, மணி ஓசை கேளாது, சுறுசுறுப்பற்று, சோபையிழந்து காட்சியளிக்கின்றன.

கந்தனின் திருவிழா என்றால் சுத்தமாகக் கூட்டிப் பெருக்கப்பட்டு, தண்ணீர் தெளிக்கப்பட்டு, கற்பூர நெடி எங்கும் மணக்க, கந்தனின் கங்கையில், தீர்த்தக் கிணறுகளில் தீர்த்தம் ஆடி, ஈரவஸ்திரங்களுடன் ஆலயத்தை வலம் வந்தும், அங்கப் பிரதிட்டை செய்தும் வேலனின் புகழ்பாடித் துதி செய்யும் மெய்யடியார் கூட்டம் ஒரு புறம்.

அரோகரா, அரோகரா என்ற மெய்சிலிர்க்க வைக்கும் அடியவர்களின் பக்திக்கோஷங்கள், மேளங்கள், நாதஸ்வரங்கள், உடுக்குகள், பறை, புல்லாங்குழல் ஆகிய பல வாத்தியங்களிலிருந்து எழும் ஓசைகளைக் கேட்டு மெய் மறந்து ஆட்டம் போடும் பக்தர்கள், மறு புறம்.

கந்தனுக்காக, கந்தனை அலங்கரிப்பதற்காக விரதமிருந்து, தூய சிந்தனையுடன் சென்று மலர்கள் சேகரித்து, ஆலய பூங்காவன மண்டபத்தில் மலர் மாலைகள் தொடுக்கும் அடியவர்களின் சுறுசுறுப்பு, கூட்டம் கூட்டமாக இருந்து வாத்தியங்களுடன் சரவணனின் புகழ் பாடிப் பஜனை செய்யும் பக்தர்களின் இனிய தேவகானம் இன்னொரு புறம்.

இன்று எதுவித ஆரவாரமுமின்றி, காற்றின் சலசலப்பு மட்டும் கேட்கும் சூன்யப் பிரதேசமாக, புல்லும், காட்டுச் செடிகளும், பற்றைகளும், இறந்த காக்கைகள், மனித எலும்புக் கூடுகள், நாய்களின் எலும்புக் கூடுகளும் நிறைந்து காணப்படும் மயான பூமியாகக் காட்சியளிக்கிறது இந்தப் புண்ணியதலம்.

செல்வச் சந்நிதியானின் ஆற்றின் மறுபக்கம் அமைக்கப்பட்டுள்ள தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து தினசரி வெடிக்கப்படும் ஷெல் சத்தங்களினாலும், துப்பாக்கிச் சத்தங்களினாலும் தொண்டமானாற்று செல்வச் சந்நிதி முருகன் செவிடாகி விட்டான், படைகளின் அட்டகாசங்களினால் இடம் பெயர்ந்து விட்டான் எனபரவசம் நிறைந்த பக்தர்கள் மனச்சாந்திக்காகக் கூறிக் கொள்ளும் வார்த்தைகள் இவை.

சிந்தித்துப் பார்க்கும்போது உண்மைதானோ என எண்ணத் தோன்றும் வகையில், சந்நிதி ஆலயம், குண்டுகள், பீரங்கிகள், துப்பாக்கிரவைகள் துளைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ள, பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்ட மதிலின் சாம்பல் குவியல், கட்டடங்கள் ஆலயதூபிகள், ஆலய கூரைகள் ஆதிமூலக் கட்டடங்கள் சுற்றுப்புற மடங்கள், கடைகள் இருக்கும் நிலை மக்களை இவ்விதம் எண்ண வைக்கின்றன.

சந்நிதி வேலனின் ஆதிமூல வேல் தரிசனத்துக்காக காத்திருக்கும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யலாம் என்னும் நோக்குடன் சிதைந்து கிடக்கும் சந்நிதி ஆலயத்தை பல அதிகாரிகள், சபையினர்கள், பலத்த பாதுகாப்புகள், பந்தோபஸ்துக்கள் மத்தியில் வந்து பார்வையிட்டுச் சென்றனர். பிரஜைகள் குழுத் தலைவர்கள் உறுப்பினர்கள், ஆலய கர்த்தர்கள் யாவரும் முயற்சி செய்தனர். கந்தனின் திருநாமம் அவன் வீற்றிருந்து தரிசனம் கொடுத்த ஆலயம் திறக்க மறுக்கப்படும் நிலையில் போர் பிரதேசஇடிபாடுகளாக காட்சி தருகின்றது.

அவனது திருவிழாக் காலங்களில் வெள்ளையடிக்கப்பட்டு, வர்ணங்கள் பூசப்பட்டு மாளிகைபோன்று காட்சி தரும் ஆலய கட்டிடங்களில் இரத்தக் கறைகளும் குண்டுகளால் துளைக்கப்பட்ட பாரிய ஓட்டைகளும், வெடி மருந்துகளின் கறுப்புப் புகைப்பட அடையாளங்களுமே காட்சி தருகின்றன.

பக்தர்களின் காவடியாட்டமென்ன, கரகாட்டமென்ன, வேலனின் சித்திரத்தேர் வலம் வரும்போது அதனைக்காணும் காட்சியெங்கே, துலாக்காவடி, தேர்க்காவடி, கரும்புக்காவடி, பால்காவடி எல்லாம் வலம் வரும் கந்தனின்வீதிகள்வெறிச் சோடி காட்சியளிக்கின்றன.

கந்தனின் திருவிழாக் காலத்தை முன்னிட்டு பக்தர்கள் யாவரும் அவனது திருக்கோல அழகினைக் காணமுடியாதபோதிலும் அந்நாட்களை மனதில்கொண்டு உபவாசமிருந்து முருகன் திருநாமத்தை தியானித்து வருகிறார்கள்.

மனமுருகித் துதி செய்யும் பக்தர்களின்கோரிக்கையீடேற தொண்டமானாறு இராணுவ முகாம் அகற்றப்படுமா? ஆலய தரிசனம் கிடைக்குமா?

## நன்றி நவிலல்

முழங்காவிலில் 3-8-86ல் நடைபெற்ற எமது மூத்த அன்புப் புதல்வன் செல்வன் ஹேமானந் அவர்களது மரணச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், பலவகையில் ஆதரவும், உதவியும் நல்கிய முழங்காவில் பொதுமக்கள், மற்றும் அனைவருக்கும் எங்களது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு
க. வரதகுமார், சந்திரவதனி,
பாப்பாமோட்டை.

தி. ஜெகநாதக்குருக்கள்,
பர்வதவர்த்தனி,
தாத்தா, அம்மம்மா,
முழங்காவில்.

R/24641

## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா:

அமெரிக்க நாட்டு பூந்தோட்ட பராமரிப்பு துறை கம்பனிக்கு தொழிலாளர்கள், சாரதிகள் மற்றும் உயர் தரத்திலுள்ளவர்க்கும் பிரயாண ஒழுங்கு 10 நாட்களில் செய்து கொடுக்கப்படும். மேற்படி கம்பனி பிரதிநிதி தெரிவு நடத்துகிறார். உடன் தொடர்பு கொள்ளவும்.

**R.K. பரமசாமி,**
ஆஸ்பத்திரி லேன்,
இணுவில் மேற்கு.

R/24639

## திருத்தம்

நேற்றைய 'ஈழமுரசு'வின் முன்பக்கத்தில் வெளியான செய்தியில் "அமைச்சர் தேவநாயகத்தை கல்குடாவில் கடத்தியவர்கள் என்று கூறப்படும்" எனப் பிரசுரமாகியது தவறாகும். "அமைச்சர் தேவநாயகத்தின் நிகழ்ச்சியில் பங்குபற்றியவர்கள் என்று கூறப்படும்" என்றே இது இடம்பெற்றிருக்க வேண்டும். இத்தவறுக்காக வருந்துகிறோம்.

— ஆசிரியர்

## அன்னதானம்

கடையிற் சுவாமி சமாதிச் சிவாலயத்தில் ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு (இன்று) அன்னதானம் வழங்கப்படும்.

## பட்டமளிப்பு

(புங்குடுதீவு)

யாழ். பல்கலைக்கழகத்தின் பொதுபட்டமளிப்பு விழா இம்மாதம் 30ம் திகதி பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் த. நடராசா தலைமையில்நடைபெறும்.

## வரி விளம்பரம்

காணி விற்பனைக்கு

பளை பஸ் நிலையத்திற் கருகாமையில் தபகாமம் றோட்டில் மின்சார வசதியுடன் வீடு கட்டக் கூடிய காணித் துண்டுகள் உடன் விற்பனைக்குண்டு.
சி.குணரத்தினம், ஸ்ரேசன் றோட், பளை. R/24642

## பிறந்தநாள் வாழ்த்து

⌘ காங்கேசன்துறை, சண்முகதாஸ் லிங்கேந்திரராணி தம்பதியின் மகன் தட்ஷணன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

⌘ சண்டிலிப்பாய், சுப்பிரமணியதாஸ் நேசராணி தம்பதியின் மகன் தனுஷன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

⌘ ஆனைக்கோட்டை, துரைராஜா தம்பதியின் மகள் சுகந்தி இன்று பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

⌘ பொன்னாலை, தேவராசா விஜயலக்ஷ்மி தம்பதியின் புதல்வன் விஜயரஞ்சன் இன்று தனது எட்டாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்.

## இன்று

தென் புலோலி, முருகையா கோவிலடி, அறிவகம் சனசமூக நிலைய 31வது ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று நடைபெறவுள்ளது. திரு. அ. செல்வரத்தினத்தின் தலைமையில் பொதுக் கூட்டமும் பரிசளிப்பும் நடைபெறும். கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரையும், பருத்தித்துறை மத்திய பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கமும் பிரதம விருந்தினராகப் பங்குகொள்கிறார்கள். பல பெரியோர்கள் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

## இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 18-ம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தமும் நடைபெறும்.

கடந்த வருடத்தில் இவ்வாலய வசந்த மண்டபம் புதுப்பிக்கப்பட்டு முருகப் பெருமானுக்கு ஒரு தனி ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அறிவித்தல்

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

மேற்படி அன்னதான சபையினர் இவ்வாண்டும் தங்கள் சேவையை வழமைபோல் சிறப்பாக 11-8-86 தொடக்கம் 20-8-86 வரை நடாத்துவதென தீர்மானித்துள்ளனர்.

நாட்டின் இன்றைய சூழ்நிலை காரணமாக சபையின் தொண்டர்கள் பணம், பொருள் வசூலிக்க, சென்ற ஆண்டுகள் போல் செயற்பட முடியாமல் உள்ளது. எனவே சபைக்கு வழமைபோல் வாரி வழங்கிய பெருமக்கள் இம்முறையும் "அமுதசுரபி" அன்னதான சபையினருடன் தொடர்புகொண்டு தங்களால் இயன்ற பங்களிப்பினைச் செய்யுமாறு மிகப் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

சபையின் சென்ற ஆண்டு வரவு செலவு அறிக்கை தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் வழமைபோல் உற்சவ காலத்திற்கு முன்னரே வெளியிட முடியாமைக்கு வருந்துகின்றோம். மிக விரைவில் இவ்வறிக்கை சபையினரால் வெளியிடப்படும் என்பதனை பணிவுடன் அறியத்தருகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள
க. வே. பரமலிங்கம் (செயலாளர்),
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை.

முக்கிய குறிப்பு:

பணம் பொருள் உதவ விரும்பும் அன்பர்கள்

1. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை. "அமுதசுரபி" மண்டபம் — நயினாதீவு.
2. சுகபாணி ஸ்ரோர்ஸ், 214, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பும் படியும், அல்லது நேரடியாகக் கொடுத்தும் அவற்றிற்குரிய சபையின் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் படியும் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நன்றி. R/24644

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரயாண ஒழுங்குகள்

சவூதிஅரேபியாவிற்கு

லேபர், கிளீனர், மேசன், தச்சு வேலை, பிளம்பர், டிரைவர், எலக்ட்ரீசியன் ஆகிய வேலைகளுக்குக் கூடிய விரைவில் செல்ல ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். அத்துடன் அபுடாபி, பாரெயன் ஆகியநாடுகளுக்கும் போவதற்கு ஒழுங்கு செய்து தரப்படும். 10-8-1986ம் திகதிக்கு முன் கீழ்க் கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்

**S. விக்னேஸ்வரன்**
68, படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

அல்லது:

**அ. ரவீந்திரன்**
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
கலைநகர் வீதி,
சித்தன்கேணி.

R/24638

முள்ளியவளைக் கூட்டத்தில் பேச்சு:

# போராட்டம் மூலமே இனவிடுதலை என்பதற்கு உலகநாடுகள் சான்று காட்டியுள்ளன!

(ஒட்டுசுட்டான்)

"நாம் ஒற்றுமையாகஇயங்க வேண்டும், பேச்சுவார்த்தையென்று காலத்தைக் கடத்திக் கொண்டு ஸ்ரீலங்கா அரசு செல்கின்றது. 1983-ம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை எத்தனையோ பேச்சுவார்த்தைகளை நடத்தியும் இதுவரை ஒரு முடிவுக்கும் வராமல் ஈற்றில் மாகாணசபையென்ற ஒன்றை எவ்வளவோ உயிர்களையும் பொருட்களையும் நாம் இழந்து விட்டபின் கொண்டுவருவதை நாம் ஏற்றுக்கொள்ளவே முடியாது. உலக நாடுகளில் கம்பூச்சியா, வியற்நாம், தென்னுபிரிக்கா போன்ற இடங்களிலும் போராட்டம் மூலமே அம்மக்கள் உரிமைகளைப் பெற்றுள்ளனர் எனவே, நாமும் போராடியே எமது உரிமைகளைப் பெறவேண்டும். அதற்கு இளையவர்களை மட்டும் முன்னுக்கு விட்டு அவர்கள் ஈழத்தைப்பெற்றுத்தரும்வரை நாம் இருப்போம் என்று கூறிக் கொண்டு இருக்காமல் நாமும் அவர்களுடன் சேர்ந்து போராடவேண்டும். 1977, 1983 இல் தமிழினத்துக்கு நடந்த பேரழிவின்போதும், எமக்கெனத் தனிநாடு வேண்டும் என்று வேகமாகத் தொடங்கியும் எமக்கிடையே ஒற்றுமையில்லாததால் அதை இடையில் விட்டுவிட்டோம். எனவே, இம்முறை எமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும்'' மேற்கண்டவாறு கற்சிலைமடு பிரஜைகள்குழுத் தலைவர் திரு. வே துரைரத்தினம் ஈழவர் முன்னணியின்சார்பில் முள்ளியவளையிலுள்ள கணுக்கேணிக் கற்பகப் பிள்ளையார் ஆலய முன்றலில் ஒய்வு பெற்ற விதானையார் திரு. சிவப்பிரகாசம் தலைமையின் கீழ் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், 'எம்மினத்தைஅழிப்பதற்கென அரசு கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் நாம் எம்மாலான பொருளுதவி செய்து இளையவர்களின் தலைமையில் ஒற்றுமைப்படவேண்டும்; அவர்களுக்கு எம்மாலான உதவிகளைச் செய்து ஊக்கம் கொடுக்கவேண்டும்; குறை பேசுவதைத் தவிர்த்து நிறைவை மட்டும் பேசவேண்டும். அப்பொழுதுதான் எமது இலக்கை விரைவில் அடைவோம்' என்றும் கூறினர்.

பிரஜைகள்குழு அங்கத்தவர் திரு எஸ். முத்துச்சுப்பிரமணியம் பேசுகையில், "1814-ம் ஆண்டுக்கு முன்பு இலங்கையில் இரண்டு இராச்சியங்கள் மட்டுமே இருந்தன. அப்பொழுது எம்மை நாமே ஆளும் இனமாக இருந்தோம். இராவணன் இலங்கையில் ஆட்சி செய்தபொழுது தமிழினம் இந்தநிலைமையில் இருக்கவில்லை என்று கம்பராமாயணமே கூறுகின்றது. 'வாழு வாழவிடு' என்ற தத்துவத்தைக் கடைப்பிடிக்காத ஒரு இனத்துடன் எம்மினம் ஒற்றுமையாக வாழ முடியாது. இவ்வளவு ஆண்டுகளும் எம்மினம் பட்ட பாடு போதும். எனவே, தனிநாடுதான் எமது ஒரே குறிக்கோளாக இருக்கவேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கும் பொழுதே வவுனியா பஸ்ஸில் பயணம் செய்த பிரயாணிகள் தண்டுவானிலும், தோட்டத்தில் வேலைசெய்த விவசாயிகள் நெடுங்கேணியிலும், அகதிகள் முகாமில் இருந்தவர்கள் மூதூரிலும் கொல்லப்பட்டனர். இப்படியே எம்மினம் அழிக்கப்படுவதை நாம் இன்னும் பொறுத்துக்கொண்டு இருக்காமல் எமக்கென ஒரு நாட்டை நாம் அமைக்கவேண்டும். எமது போராளிகளையும் இந்தியா இதுவரை அங்கீகரிக்காது விட்டாலும் விரைவில் அங்கீகரிக்கும் என்றே எதிர்பார்க்கிறோம். எம்மவர்களைத் தமது நாட்டில் தங்குவதற்கு இடம் கொடுக்காது விட்டாலும் எமது போராளிகளை அங்கீகரித்துவிட்டாலே எமக்குச் செய்யும் உதவியாகும்'' என்றும் கூறினர்.

முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமான இவ்வூர்வலத்தில் பாடசாலைச் சிறுவர்கள், பெண்கள், வாலிபர்கள் உட்பட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். பாடசாலைகளை இராணுவ முகாமாக்காதே, பாடசாலைச் சிறுவர்களின் கல்வியைப் பாழடிக்காதே, தமிழீழமே எமது இலட்சியம் போன்ற சுலோக அட்டைகளும் ஊர்வலத்தில் காணப்பட்டன. திரு. க. தவராசா திரு. திரியாய் பாலகிருஷ்ணர் ஆகியோரும் பேசினர்.

# யாழ் மாவட்ட பாடசாலை ஆங்கில தினப் போட்டிகள்

(சுன்னாகம்)

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படவிருக்கும் ஆங்கில தினப் போட்டிகள் மாவட்ட மட்டத்தில் செப்டம்பர் மாதம் 6, 15, 16, 18ந் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன. இம்முறை வழமைபோலல்லாது வெவ்வேறு பாடசாலைகளில் போட்டிகள் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

செப்டம்பர் 6ந் திகதி சகல பிரிவுப்பாடசாலை மாணவர்களுக்குமான எழுத்து, கட்டுரை, குழுப் பாடல் நிகழ்ச்சிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். செப்டம்பர் 15ந்திகதி 1தொடக்கம் 6 வரை ஆண்டுகள் வகுப்புகள் உள்ள மூன்றுந்தரப் பாடசாலை மாணவர்களின் சகல நிகழ்ச்சிகளும் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. 1 தொடக்கம் 11ம் ஆண்டு வரையான வகுப்புகளுள்ள இரண்டாந்தரப் பாடசாலைகளின் சகல நிகழ்ச்சிகளும் செப்டம்பர் 16ந் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். செப்டெம்பர் 18ந் திகதி 1 தொடக்கம் 13 வரை ஆண்டுகளுள்ள முதலாந்தரப் பாடசாலைகளின் சகல நிகழ்ச்சிகளும் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

வேலணை கல்வி வட்டாரந் தவிர்ந்த ஏனைய வட்டாரங்களினதும், கொத்தணிப் பாடசாலைகளினதும் வட்டார மட்டத்திலான போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

வேலணை வட்டாரப் போட்டிகள் கல்வி அதிகாரி பொன். கணேசனால் நடத்தி முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

# மயிலிட்டியில் அகதிகட்கு தொண்டர் சங்கங்கள் உதவி

(சுன்னாகம்)

மயிலிட்டிப் பகுதிகளில் வசிக்கும் அகதி மக்களுக்கு அவர்களின் கஷ்ட நிலையைப் போக்கு முகமாக பல சமூக தொண்டர் ஸ்தாபனங்கள் உதவ முன்வந்துள்ளன.

எதுவித தொழிலுமற்ற நிலையில் இருக்கும் இம் மக்களுக்கு ரோட்டறிக் கழகம், சர்வோதயம், சற்றடே றிவியூ, சனசமூக நிலையங்கள் ஆகியன பணமாகவும், உணவு, உடையாகவும் உதவி வருகின்றன. இவ்வுதவிகள் குறிப்பாக மயிலிட்டி கரையோரப் பகுதி மக்களுக்கே அளிக்கப்படுகின்றன.

உணவு முத்திரையைத் தவிர வேறெந்த உதவியும் இன்றி இப் பகுதி மக்கள் துன்பமுறுவது குறிப்பிடத்தக்கது.

# ஈழத்து சிவானந்தனுக்கு மலேஷியாவில் 'தமிழ் தென்றல்' பட்டம் வழங்கி கௌரவம்

(ஜோகூர்)

மலேஷியாவில் இந்து சமயத்தின் மிகப்பெரிய இயக்கமாகிய மலேஷிய இந்து சங்கம் புலவர் ஈழத்துச் சிவானந்தனுக்கு "தமிழ்த்தென்றல்'' என்னும் பட்டத்தை வழங்கியது.

மூவார் ஸ்ரீ முத்து மாரி அம்மன் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகத்திற்குப் பின்பு புலவருக்கு நடந்த பாராட்டு விழாவில் மேற்படி பட்டம் வழங்கப்பட்டது. "அரசியலில், தொழில் சங்கத்தில், கலைத்துறையில் சமயத்துறையில் பல்லாண்டு காலமாக பணியாற்றிவரும் புலவர் சிவானந்தனுக்கு தமிழ்த்தென்றல் என்னும் பட்டமே பொருததமானது என முடிவு செய்து எங்கள் சங்கத்தின் சார்பில் இதனை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்' என்று இந்து சங்கத்தின் தலைவர் திரு. எஸ். சிவம் குறிப்பிட்டார்.

"மலேஷியநாட்டில் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று சமயச். சொற்பொழிவு நிகழ்த்தியும் மலேஷியஇந்து சங்கத்தின் சார்பில் நடந்த இந்து திருநாளின் போது 'சமயத்தின் வழி சமூகத்தொண்டு' என்னும் கருப்பொருளில் பேருரை பகர்ந்தும் மூவார் ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில் மகா கும்பாபிஷேகத்தை ஒட்டி தொடர் சொற்பொழிவுகளை ஆற்றியவருமான புலவர் ஈழத்து சிவானந்தன் அவர்களுக்கு தமிழ்த் தென்றல் என்னும் பட்டத்தை அம்பிகையின் திருவடிகளில் வைத்து பூஜை செய்து வழங்குகின்றோம்'' என்னும் வாசகம் எழுதப்பட்ட படிவத்தை புலவருககு வழங்கினார்கள்.

ஆலயத் திருப்பணித்துறைத் தலைவர் சட்டத்தரணி கே. ஜெயசிங்கம் புலவருக்கு மாலை அணிவித்து வாழ்த்துக் கூறினார். ஆலய உற்சவமூர்த்திக்கு அருகில் வைத்து நடத்தப்பட்ட இந்த பட்டமளிப்பு விழாவில் சிவாச்சாரியார் வீ குகதாசக் குருக்கள் வடமொழி வாழ்த்துக்கூறி புலவருக்கு விசேட காளாஞ்சி வழங்கினார்.

அடிகளார் பாதையிலே, ஈழத்தில் யான் கண்ட சொற்செல்வர்கள், சீதனக்கொடுமை ஒழிக, ஈழத்து சொற்பொழிவுகள் ஆகிய நூல்களை எழுதி வெளியிட்ட புலவர், புங்குடு தீவைச் சேர்ந்த சைவ சித்தாந்தச் செம்மல் கணபதிப் பிள்ளையின் மகன் என்பதும் சிவராமலிங்கத்தின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"பல்லுப் போனால் சொல்லுப் போச்சு"

# தினசரி காலையும், இரவும் பற்களைத் துலக்கவேண்டும்

கதைப்பதற்கும், சிரிப்பதற்கும், சாப்பிடுவதற்கும் உதவுவன பற்களாகும். நல்ல சுகாதாரப் பழக்கங்களை இளமையிலிருந்தே பழகினால் பற்களில் நோய் ஏற்படாமல் பாதுகாக்கலாம். கவலையீனமே பற்களில் நோய் ஏற்படக் காரணமாகும். முரசு கரைதலே பற்கள் விழக் காரணமாகும். உணவுப் பொருட்கள் தேங்கி இருப்பதால் பல்லிடைவெளிகளில் ஒருவித அமிலங்களும், பற்றீரியாக்களும் உண்டாகும். ஆகவே தான் காலையிலும் இரவு படுக்கைக்கு முன்பும் சரியான முறையில் பல் துலக்க வேண்டும். "ஆலும் வேலும்'' பல்லுக்குறுதி என்று நமது மூதாதையர்கள் கூறினார்கள். ஆகவேதான் பற்பசை தான் தேவையென்று கருதக்கூடாது.

இவ்வாறு யாழ் இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் பல்லைப் பாதுகாத்தல், பல்லின் அமைப்பு போன்ற விடயங்களில் கலந்துரையாடிய யாழ் நகர பாடசாலைப் பற்சிகிச்சையாளர் திருமதி ஞா. நாகேந்திரன் கூறினார்.

இக் கருத்தரங்கு அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெற்றது. மாணவர்கள் பலர் கலந்துகொண்டு பல பயனுள்ள வினாக்களைக் கேட்டு பல்லைப் பற்றிய அறிவைப் பெற்றனர். ஆசிரியை திருமதி இ. பேராயிரம் நன்றி கூறினார்.

# 'இன விடுதலைக்காக நமது இளைஞர் பெரும் தியாகம்'

(சரசாலை)

"இன்று தமிழ் மக்கள் சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எம் இன விடிவிற்காகப் போராடும் இளைஞர்கள் பல்வேறு தியாகங்கள் ஊடாக தமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர் இந்நிலையில் நாம் பார்வையாளர்களாக நின்று வேடிக்கை பார்க்க முடியாது. தமிழ் மக்களின் துயரங்கள் நீங்க வேண்டுமானால் எந்த வழியிலாவது இன்றைய போராட்டத்தில் பங்களிக்க வேண்டும்.''

இவ்வாறு சாவகச்சேரி மக்கள்ஒன்றிய புனரமைப்புக் கூட்டததில் தலைமையுரையாற்றிய ஒன்றிய தலைவரும் சாவகச்சேரி வடக்குஇணக்க சபைத்தலைவருமான திரு. த.சிதம்பரப்பிள்ளை குறிப்பிட்டார்.

டிறிபேர்க்கல்லூரியில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "இன்றைய காலகட்டத்தில் பிரஜைகள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன அவை மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் அதே போல் மக்கள் ஒன்றியமும் மக்கள் குறை போக்க பாடுபடும்'' என்றார்.

மக்கள் ஒன்றிய செயற் குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திருவாளர்கள் திரு.எஸ். விநாயகமூர்த்தி, டாக்டர் திரு. வி. கே. திருலோகமூர்த்தி ஆகியோர் தெரிவாகினர் ஒன்றியச் செயலாளர் இளைப்பாறிய ஆசிரியர் திரு. இ. சின்னத்தம்பி நன்றி நவின்றார்.

# சமுத்திர தீர்த்தம்

தாளையடி திரியாய் அம்மன் கோயில் சமுத்திர தீர்த்தம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கலாநிதி மௌனகுரு பேச்சு:

# 'சாணு'வின் படைப்புக்கள் இன்றைய ஆய்வுக்குரியவை

மறைந்த பொ. சண்முகநாதன் (சாணு) அவர்களது மேடை, வானொலி நாடகங்கள் நாடக மரபு வளர்ச்சியில் ஆய்வுக்குரிய பொக்கிஷங்கள் என கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் இணுவில் கலை இலக்கிய இளைஞர் வட்டத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சாணுவின் ஏழாவது நினைவு தின உரையில் குறிப்பிட்டுப் பேசினார். மேற்படி கூட்டம் இணுவில் அ. மி. த. க. பாடசாலை மண்டபத்தில் வட்டத் தலைவர் திரு. துரை எங்கரசு தலைமையின் கீழ் நடைபெற்றது.

தொடர்ந்து அவர் பேசும் போது, அவரது நாடகம் குறிப்புக்கள் இன்றைய நாடக ஆய்வுகளுக்கு மிகவும் பயனுள்ளனவாக அமையும் என்றும் நாடகப் பாரம்பரியத்தில் சாணு ஒரு கண்ணி என்றும் வரலாற்றுப் பண்பு, இயற்பண்பு சார்ந்த நாடகங்களை இவர் உருவாக்கினார் என்றும் இவரது நாடகங்களை மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள் என இருவகையாக அவதானிக்கலாம் என்றும் சாணுவின் நாடக வாரிசுகள் அவரை இன்றும் நினைவு கூரும் வகையில் கலைத் தொண்டாற்றி வருகிறார்கள் என்றும் அவரது படைப்புக்கள் நூல் வடிவம் ஆக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

நடிகமணி வி. வி. வைரமுத்து பேசும் போது, சாணு அவர்கள் இறந்தும் இறவாத ஒரு மனிதப் பிறவி என்றும் அவரது கண்டிப்பும் கண்ணியமும் அவரது உழைப்பின் வெற்றி என்றும், இலங்கை வானொலியில் கடமையாற்றிய காலத்தில் யாழ்ப்பாணத் தமிழை வானொலி மூலம் மெருகூட்டியவர் என்றும் குறிப்பிட்டார்.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, 'இசைநாடக மரபில் அவருக்கிருந்த அக்கறையும், நாட்டுக் கூத்திலுள்ள அவாவும், கலையரசு சொர்ணலிங்கத்துடனான தொடர்பும் சித்திரம், ஒப்பனை ஆகியவற்றில் அவருக்குண்டான ஈடுபாடும் அவரது நாடக வெற்றிக்கும் காத்திரமான அறுவடைக்கும் பெரிதும் உதவின' என்று தமது பேச்சில் சொன்னார்.

கவிஞர் சா. வே. பஞ்சாட்சரம், கலைஞர் கே. எஸ்.பாலச்சந்திரன், ஆகியோரும் நினைவுரை ஆற்றினர்கள். கே. ஸ்ரீ கணேசனது வரவேற்புரையுடன் ஆரம்பமான கூட்டம் இணுவையூர் சிதம்பர. திருச்செந்திநாதனது நன்றியுரையுடன் முடிவடைந்தது.

உதய சிந்தனை

கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானுல் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அப்போதே செய்தற்கரிய செயல்களைச் செய்யவேண்டும். —திருவள்ளுவர்.

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி, 22437

5-8-86 செவ்வாய்க்கிழமை (அக்ஷய) ஆடி 20

# பாலசூரியாவின் பேச்சை படித்துப் பாருங்கள்!

1983 ஜூலை மாதத்தில் சிங்கள மக்கள் தமிழர்கள் மீது நடத்திய கொடூரமான தாக்குதலே இன்றைய நிலைக்குக் காரணமாக அமைந்ததென்பதை சிங்களத் தலைவர்கள் பலர் இப்போது உணர்ந்து வருவதை, தெற்கிலிருந்து வரும் பல குரல்கள் இப்போது தெரியப்படுத்தி வருகின்றன.

காணி அமைச்சர் காமினி திஸநாயக்காவின் அண்மைய பேச்சொன்றினை நேற்று இங்கு கவனத்தில் எடுத்தோம்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனவும்கூட இதே சாரப்பட ஒரு உரையை நிகழ்த்தியிருக்கிறார்.

ஜூலைக் கலவரம் எற்பட்டிராதிருந்திருக்குமானுல் கடந்த மூன்ருண்டுகளில் ஆயுதப் படையினருக்குச் செலவிட்டபணத்தை நாட்டின் அபிவிருத்திக்குச் செலவிட்டு இலங்கையை அபிவிருத்தியடைந்த ஒரு நாடாக்கியிருக்கலாமென்று அவர் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களைக் கொன்று குவிப்பதால், அவர்களின் சொத்துக்களை அழித்துவிடுவதால், அவர்களை அகதிகளாக்குவதால் இனப்பிரச்சினையைத் தீர்த்துவிடலாமென்று நினைப்பது முட்டாள் தனமானது என்றும் அதிஉத்தம ஜனாதிபதி அவர்கள் கடந்தவார இறுதியில் பங்குபற்றிய மூன்று பொதுக்கூட்டங்களில் சுட்டிக்காட்டியுள்ளார்.

''போர் என்ருல் போர்'' என்ற பிரகடனமும், ''கடைசிச் சிங்களவன் இருக்கும் வரை போராடியே தீருவான்'' என்ற வீர கர்ஜனைகளும், ''எல்லாளனை துட்டகைமுனு என்ன செய்தான்?'' என்ற யுத்தமுனைக் கேள்விகளும் ஆட்சியாளர்களிடமிருந்து வந்ததால்தான் 83 ஜூலை கலவரம் உருவானது என்பதை அதி உத்தமஞர் மறுக்கமுடியாது!

பழைய சம்பவங்களை, மறக்க வேண்டிய பேச்சுக்களை நாம் நினைவுபடுத்திப் பார்க்கவிரும்பவில்லை.

ஆனுல் இன்றும் கூட இவ்வாருன பேச்சுக்களை முக்கியஸ்தர்கள் சிலர் நிகழ்த்தும் போது, ஜூலை கறுப்பு மாதத்தை மறந்துவிட்டனரே என்பதுதான் எமக்குக் கவலையைத் தருகின்றது.

''மாகாண சபை ஏற்பட்டால் தமிழீழம் தானுகவே உருவாகும்'' என்று சிங்கள மக்களைத் தூண்டிவிடும் வகையில் பேசி வருகிருர் ஸ்ரீமாவோ அம்மையார்,

ஸ்ரீமாவோவுக்கு தான் குறைந்தவரல்ல என்பதைச் சிங்கள மக்களுக்குக் காட்டுவது போல, ''சமாதானப் பேச்சு தோல்வி காணுமானுல், யுத்த முனையில் தீர்வு காணுவேன்'' என்று ஜனாதிபதி அவர்கள் கர்ஜனை செய்துள்ளார்.

சிங்கள மக்களின் வாக்குகளையே நம்பி ஆட்சி நடத்துபவர்கள், அந்த மக்களைத் 'தாஜா' பண்ணவேண்டியது அவசியமே என்ருலும் கூட, தமிழ் மக்களைப் பயமுறுத்தும் வகையில் எச்சரிக்கைத் தொனியில் பொதுக்கூட்டங்களில் உரை நிகழ்த்துவது அரசியலுக்கு அழகல்ல என்பதே எமது கருத்து.

தேசியத் தலைவர்கள், நாட்டின் முன்னுள் பிரதமர்கள், அணிசேரா நாடுகளின் தலைவர்கள் என்ற பல 'அணிகலன்'களை தம்தலையில் சுமந்துள்ள இவர்களின் பேச்சுக்கள் எந்த வகையிலாவது சமாதானத் தீர்வொன்றைக் காணக் கைகொடுக்குமா என்பது எமக்குச் சந்தேகத்தையே ஊட்டுகின்றது.

தமது முன்னைய பிழையை ஒப்புக்கொள்வதும், மீண்டும் முன்னையதிலும் பார்க்க மோசமான பிழையைச்செய்ய எத்தனிப்பதும் அரசியலுக்கே உரியது போலும்!

இவ்வாருன நிலையில், கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் வணக்கத்துக்குரிய பிதா பாலசூரிய அவர்கள் நிகழ்த்திய நீண்ட உரையை எமது நாட்டின் அரசியல் வாதிகளும், தலைவர்களும் ஒரு தடவை படித்துப் பார்ப்பது நல்லது.

''தாம் பிறந்த மண்ணில், தங்கள் தாய்நாட்டில், தங்கள் சொந்தப் பூமியில் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் வாழ தமிழ் மக்கள் விரும்புகிருர்கள். இதனைச் செய்து கொடுப்பதால் நாட்டுக்கும் கௌரவம்; ஆட்சியாளருக்கும் கௌரவம்'' என்று மிகவும் இதயசுத்தியுடன் வண. பிதா சொல்லியுள்ளார்.

உலகமெல்லாம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக அடைக்கலம் புகுவதால் இந்நாட்டின் கௌரவம் பாழாகின்றது என்பதை எமது அரசியல் தலைவர்கள் உணரவேண்டும் என்றும் அவர் எடுத்துக் கூறியுள்ளார்.

அது மட்டுமல்ல, ஜூலை கலவரத்தின் போது ஒன்றேகால் லட்சம் தமிழரை விரட்டி அனுப்பியமைக்காக சிங்கள மக்கள் தமது பிழையை உணர்ந்து மன்னிப்புக்கோரவேண்டும் எனவும் மிக நிதானமாக வண. பிதா தெரிவித்துள்ளார்.

''எம்மிடம் எவரும் மன்னிப்புக்கோர வேண்டாம்; இனி மேலாவது இவ்வாறு நடந்து கொள்ளாதிருந்தால் நல்லது'' என்பதே எமது நிலையாகும்.

---

★ வரலாற்றுப் பெருமை மிக்க மதுரை மாநாடு பல கிளர்ச்சிகளை உண்டு பண்ணியுள்ளது. இதனை ஒரு தொகுப்பாக 'புரன்ட்லைன்' வெளியிட்ட கட்டுரை, இங்கு மொழி பெயர்த்துத் தரப்படுகின்றது.

# கத்தி ஏந்தச் சொன்னபோதும் எம். ஜி. ஆரின் 'மார்க்கட்டுக்கு' எந்த ஆபத்தும் இடையாது!

''தற்பாதுகாப்புக்காகக் கத்தி ஏந்துங்கள்'' என்று ஆலோசனை கூறப்பட்டுச் சில நாட்களே கடந்துள்ளன. ஆயினும் இன்று இதுபற்றி அறியாதார் எவரும் இலர். தமிழ் நாட்டு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் தமது கட்சியினருக்கு வழங்கிய மதியுரை இது. முதலில் எவருமே இதனைப் பாரதூரமாகக் கருத்திற் கொள்ளவில்லை. ஆனுல், 1986 ஜூலை பதின்மூன்ரும் திகதி மதுரையில் நடந்த எம். ஜி. ஆர். மன்ற மாநாட்டில் இதே ஆலோசனை முதலமைச்சர் இராமச்சந்திரனுலேயே ஆணித்தரமாக மீண்டும் வலியுறுத்தப்பட்டபோது, அது பரவலாகப் பலருக்கும் பூதாகாரமாகப் பயமூட்டுவதாகத் தொனித்தது. அகில உலக எம். ஜி. ஆர். ஆர்வலர்கள் மன்ற இறுதி அமர்வின்போது அவரது ஆதரவாளர்கள், ஆர்வலர்கள் (Fans) இலட்சோபலட்சமாக அங்கு குழுமியிருந்தனர். அத்தருணம் அவர்களது காதிலும்கூட அப்படித்தான் அது ஒலித்தது.

இந்த ஆலோசனையின் பாரதூர விளைவுகளைக் கற்பனைபண்ணிப் பார்க்கக்கூடியவர்கள், இது ஒரு 'நா-வழு' வாக இருக்க முடியாதா? ஆர்வலர் சமுத்திர மத்தியில் கணப்பொழுது மின்னிமறைந்த மன எழுச்சியின் விளைவாக இருக்கலாகாதா என்று மனங்குழம்பினர்.

பட்டும் படாமலும், 'பற்றற்று' இவற்றையெல்லாம் நோக்கும் பொதுமக்கள், உரத்த ஒரு சிரிப்பொலியோடு தங்கள் மனதைவிட்டு அதனை அகற்றிவிட்டனர்.

கூட்டம் நடந்தேறிய மறுநாள், தமிழ்நாடு மாநில அமைச்சர்களில் ஓரிருவர் குறித்த ஆலோசனையையிட்டு விளக்கம் அளிக்க முற்பட்டனர். அப்பொழுதுதான் இம் மதியுரை ஆய்ந்தோய்ந்து வழங்கப் பெற்றமையும், பாரதூரமாக மனதிற் கொள்ளப்பட வேண்டியமையும், சகலர்க்கும் தெளிவுறப் புலனுயின.

அதனையடுத்து, ஒரு மூளவே சாச்சை பிற கட்சிகளின் தலைவர்களிடமிருந்து கண்டன விமர்சனங்கள் வெளியாயின. சாட்சாத் எம். ஜி ஆரிடம் இருந்தே நீண்டதொரு அறிக்கை விடுக்கப்பட்டது. அறிக்கை இவ்வாலோசனையை நியாயப் படுத்தியது என்பதிலும் பார்க்க, திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் ஆளும் கட்சிக்கு ஏற்பட்டிருந்த பயப் பிராந்தியைப் பிரதிபலித்தது என்பது சாலப் பொருந்தும்.

தாம் 'கத்தியேந்தும்' ஆலோசனை கூறக் காரணம் என்ன என்பதை எம் ஜி. ஆரின் அறிக்கை பின்வருமாறு நியாயப் படுத்தித் தற்காத்துக்கொள்ள முனைகிறது: தி.மு.க தலைவர் மு. கருணுநிதி தமது கட்சித் தொண்டர்களை தம்முடைய சொந்தச் 'சேனை'களை நிறுவும்படி பணித்துள்ளார் அண்ணு தி மு.கட்சியினருக்கு எதிரான வன்செயல் மிரட்டல் இப் பணிப்புரையினுள் தொக்கு நிற்கிறது. ஒரு தற்காப்பு மார்க்கமாக மாத்திரமே எம். ஜி. ஆர். தமது கட்சியாளர்களைக் கத்தி ஏந்திநடமாடும்படி கோரியுள்ளார்.

மதுரைச் சொற்பொழிவின் மீது கருணுநிதி கூறும் கருத்துரையாது? சட்டமும் ஒழுங்கும் நிலைகுலைதலின் ஓர் அறிகுறி அது என்கிருர் அவர். இவ்வாறு எம்.ஜி ஆரின் பேருரைக்கு அர்த்தம் கற்பித்து மக்கள் மனதில் ஒரு குழப்ப நிலையை உண்டாக்க முயல்கிருர் கருணுநிதி.

இவை யாவும் இங்ஙனமாக இருந்தும்கூட, கத்தி ஏந்தல் சர்ச்சையானது, அரசியலாளர்கள், பொதுசனங்கள், ஆகியோர் மத்தியில், காரசாரமான உரையாடல் விடயமாக இடம் பெற்றுள்ளமை மட்டும் உண்மையே. முதலமைச்சரின் ஆலோசனை வன்செயலுக்குத் தூபமிடுகிறது என்ருர் கருணுநிதி. இந்திய கம்யூனிஸ்ற் கட்சியும், (மார்க்ஸிஸ) இந்திய கம்யூனிற் கட்சியும் ஜனநாயக வாழ்க்கைக்கு எதிராக தமிழ் நாடு மாநிலத்தில் தோன்றியுள்ள ஒரு மிரட்டலாகக் காண்கின்றன.



இன்னும் அநேகர், முதலமைச்சருக்கு இது அழகல்ல என்கின்றனர். விசேடமாக பொலிஸ் படையினரின் திறனையும் தரக் குறைவாக அந்த ஆலோசனை பிரதிபலிக்கிறது எனவும்; ஆலோசனை நிறைவேறும் பட்சத்தில் பாரதூரமான சட்டம், ஒழுங்குப் பிரச்சினையொன்றுக்கு அரநிலைமை வழிகோல இடமுண்டாகலாம் எனவும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கத்தியேந்தல் விடயம் ஒரு புறமிருக்க, வேறு காரணங்களை முன்னிட்டும் மதுரை மாநாடு அ.தி.மு.க. வரலாற்றில் இடம்பெறும். அங்கு குழுமிய சனப் பிரவாகத்தை வாழ்க்கையிலேயே அத்தகைய மாநாடுகளில் எவரும் கண்டிருக்க மாட்டார்கள். 1986, ஜூலை பன்னிரண்டாம், பதின்மூன்ரும் திகதிகளில் மதுரை மாநகரில் நிரம்பி வழிந்த ஜன சமுத்திரம் சொல்லில் அடங்காது. தெரு, வீதிகள், பாட்டைகளில் வாகனப் போக்குவரத்து ஏறத்தாழ முற்றிலும் ஸ்தம்பிதமாயிற்று. கடைகள் சிற்றுண்டி, போஜன சாலைகள் மூடிக்கிடந்தன. குடியியல் சேவைகள் ஒரே அமளி துமளிப்பட்டன. மாநகர மக்களின் சாதாரண, நாளாந்த வாழ்க்கையை எவரும்தொடர முடியாது போய்விட்டது.

ஆயிரமாயிரம் உற்பத்தித் தொழிற்சாலைத் தொழிலாளர்கள், உழவர் பெருமக்கள், பாட்டை சாரிகள், கிராமப் புறத்தவர்கள் முதலாயினேர் வீதியோரமாகக் கிடந்தபடி இரவு முழுவதும் கண்விழித்திருந்தனர். உணவுச்சாலைகள் மூடப்பட்டிருந்தமையால், உண்ணக் குடிக்க எத்தனையும் பெறமுடியாது., அவர்கள் 'சிவபட்டினி'யாகவே தமது 'உயிர் வாழும் தெய்வம் எம். ஜி. ஆர். எப்போ அவ்வழியால் வருவார் எனக் கண்குளிரக் காண வாய்ப்பு நோக்கி ஏங்கித் தவங்கிடந்தனர்.

குறைந்தபட்சம் அந்த எண்ணற்ற ஆர்வலர் கோடிகளின் காட்சியாவது ஓர் உண்மையை நிறுவியது எனலாம்; எம். ஜி. ஆர். ஆதரவாளரின் தொகை வரவரக குறைந்து போய்விட்டது என்கிருர்களே, அவருக்கு எதிரானவர்கள். அவர்களது கூற்றை அப்பட்டமான பொய்யாக்கிவிட்டது. இந்தக் கரைபுரண்டோடிய இலட்சோப இலட்சம் சனங்களின் எம். ஜி. ஆர். ஆர்வ வைராக்கியப் பெருக்கு சாதாரணமாக அந்நாளைய போக்குவரத்துகளை நெருங்கி நின்று அவதனித்த எவருக்கும் எம். ஜி ஆர். இன்றும் பெற்றுப் பிரகாசிக்கும் பிரபா விலாசம் கட்டுறுதி குலையாது இருக்கின்றமை நன்கு தெரியும். அவர்களுடைய உடல்வகை மட்டுப்பாடுகள் காரணமாக, முன்போல நினைத்த நினைத்த 'தலலிகளுககு' எலலாம் அவரால் விஜயம் மேற்கொள்ள இயலாதுதான்; ஜன சமுத்திரங்களை விளித்து உரையாற்ற முடியாததுதான். ஆனுலும் எம். ஜி. இராமச்சந்திரனைத் தொடரும் மக்களுக்குக் குறைவே கிடையாது என்பதை மட்டும் மறுக்க முடியாது.

1986, ஜூலை நடுப்பகுதியில் நடந்தேறிய எம். ஜி. ஆர். ஆர்வலர் மன்ற மாநாடு மதுரை மாநகரின் குதிரைப் பந்தயத் திடலைக் களமாகக் கொண்டிருந்தது. அது அந்நாட்களில் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத் தீவிர உறுப்பினர்களுக்கு இன்னுமொரு வகையிலும் பயன்பட்டது. அ. தி. மு. கட்சியின் எதிர்காலம் எப்படியாக அமைதல் வேண்டும்? அதன்கண் எமது நாளைய பங்கும் பதவியும் என்ன வடிவம் பெறும்? இவை போலும் வினுக்களுக்கு விடைகாணும் பாங்கில், அரசியற் பேரவா மிக்க கட்சி முன்னணியினர் தமது இஷ்ட சகாக்களோடு தனிப்பட, அந்தரங்கமாகக் கலந்து ஆலோசிக்கவும் இப்பந்தயத் திடல் வாய்ப்பாகப் போய்விட்டது.

இம்மதுரை மன்ற மாநாட்டின்போது எம். ஜி. ஆருக்கு அடுத்தபடியாகமேடையொளி பட்டுத் துலங்கிய தாரகை, அ. தி. மு. க. பிரசாரச் செயலாளர் ஜெயலலிதா ஆவர். ஆர்வலர் மன்றத்துடன் இவருக்கு நேரடியான தொடர்பு இல்லை. ஆயினும் மாநாட்டின்கண் ஒரு தலைமைப் பங்கு இவ

—5 ம் பக்கம் பார்க்க

### மகோற்சவகாலக் கட்டுரை

# நயினையில் குடியமர்ந்து அருள் வழங்கும் நாகபூஷணி

## இன்று கொடியேற்றம்

ஈழ மணித் திருநாட்டின் மணி மகுடமாய்த் திகழ்வது யாழ்ப்பாணம். அந்த மணிமகுடத்தில் பதித்த இரத்தினங்களாய் மிளிர்வன அதனைச் சூழ்ந்துள்ள சப்ததீவுகள். இத் தீவுகள் அனைத்துள்ளும் மாணிக்கமாய் மின்னுவது அன்னை நாகபூஷணியின் அருட் பேராற்றைத் தனலகத்தே கொண்ட நயினாதீவு.

இங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அகிலாண்ட கோடியென்ற அம்பிகையை மறைகள் யாவும் கன்னியெனப் போற்றுகின்றன. அவளுக்கு இப்புவியில் அறுபத்தி நான்கு சக்தி பீடங்கள் அமைந்துள்ளதாக தேவி பராக்கிரமம் முதலிய நூல்கள் பகருகின்றன. மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், சிதம்பரத்தில் தில்லைக்காளியாகவும் நித்திலவு சுந்தமணி பெய்து நயினை நகரின் கண்ணை நாகேஸ்வரி அம்மையாக தம்மடியவர்க்கு நற்காட்சி கொடுத்தருளுகின்றாள். இதுவே சகதி பீடங்களுள் புவனேஸ்வரி பீடமாகப் போற்றப்படுகின்றது.

நாகர்களும், நாக சர்ப்பங்களும் பூசித்து வந்தமையினால் இங்குள்ள அம்பிகை நாகபூஷணியாகக் காட்சி கொடுக்கின்றாள். ஆலய மூலஸ்தானத்திலே ஐந்து தலை நாகமும் அதன் முன்னே அமைந்த அம்மன் விக்கிரகமும் பார்க்கும் எவரையும் பரவசமாக்கும் பராசக்தியின் வடிவம் எனலாம்.

இவ் வாலயத்தின் தோற்றம் பற்றிய காவிய வரலாறுகளும் கர்ணபரம்பரைக் கதைகளும் அனேகம் உண்டு. இருப்பினும் மணிமேகலையில் கூறப்படுவது ஆலயத்தின் தோற்றமாக அறுக்கு மன அலைகரின் நயபிகக்கை.

முன்னொருகால் வாரசியில அபஞ்சிகன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவி சாலி என்பாள் தம் கணவருக்குத் தெரியாமல் கர்ப்பவதியானாள். அக்கர்ப்பத்தில் உதித்த ஆண் மகவு பசு ஒன்றினால் வளர்க்கப்பட்டது. இதன் காரணமாக அக்குழந்தைக்கு ஆபுத்திரன் என்ற பெயர் உண்டாயிற்று. பின்பு ஆபுத்திரன் பூதி என்பவரால் எடுத்து வளர்க்கப்பட்டான். இந்த ஆபுத்திரனுக்கு பசித்தோர்க் கெல்லாம் அமுதூட்டும் சக்தி பெற்ற அமுதசுரபி எனும் பாத்திரம் அன்னை பராசக்தியால் வழங்கப் பெற்றது.

ஆபுத்திரன் உலகில் உள்ள அனைவருக்கும் பசிப்பிணி அகற்றியமையினால் அவனது தருமம் இந்திரனது தருமத்தையும் விஞ்சி விட்டது. இதனால் இந்திரன் பொறாமை கொண்டான். ஆபுத்திரனின் தாமம் பெருகவிடாது சூழ்ச்சிகள் பல செய்யத் தொடங்கினான். பாண்டிய நாடு முழுவதும் பசிப்பிணியை நீக்கினான் இந்திரன். இதனால் அமுதசுரபி அங்கு பயனில்லாமற் போகவே அப்பாத்திரத்தைக் கொண்டு சாவக நாட்டின் பசிப்பிணி அகற்ற கடல் மார்க்கமாக புறப்பட்டான் ஆபுத்திரன்.

இதனைக் கேள்வியுற்ற இந்திரன் புயற்காற்றை உண்டு பண்ணி ஆபுத்திரன் பயணம் செய்த மரக்கலத்தை மணிபல்லவத்தீவான நயினாதீவில் உள்ள கோமுகி என்னும் பொய்கைக்கரையிலே கரை சேர்த்துக் செய்தான்.

மனித நடமாட்டமில்லாத இத்தீவில் இப்பாத்திரத்தைக் கொண்டு எவர்க்கும் பசிப்பிணி போக்க முடியவில்லையே என ஆபுத்திரன் மனம் மிக நொந்து தானும் புசியாமல் அமுதசுரபியையும் கோமுகிப் பொய்கையிலே விட்டு விட்டு தானும் உயிர் நீத்தான். இவ்வாறாக ஆபுத்திரன் உயிர் நீத்ததால் ஏற்படக்கூடிய பிரமஹத்தி தோஷத்தை நீக்கும் பொருட்டு ஆபுத்திரன் உயிர் நீத்த மணிபல்லவத் தீவான நயினாதீவிலே புவனேஸ்வரி பீடத்தை இந்திரன் பிரதிஷ்டை செய்து வழிபட்டான். இந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட இவ்வாலயமே இன்று நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயமாக மிளிருகின்றது. இதினால் மனிதரும், தேவரும் மாமுனிவரும் வணங்கி ஏத்தும் தலம் இத்தலம் எனலாம்.

இத்துணை சிறப்புப் பெற்ற இவ்வாலயத்திற்கு வந்து அம்பிகையை வழிபடும் அடியார்கட்கு சந்தானம் பிறந்தாது சிந்தாகுலம் தீர்த்து அருள்வாள், அதோடு நில்லாது அவள் கடைக்கண் பார்வையினால் வல்வினை, துன்பம் நீங்கும். அதுமட்டுமல்ல கல்லாத கல்வி, குறையாத வயது, கபடுவராத நட்பு, கன்றாத வளமை, குன்றாத இளமை, கழுபிணியில்லாத உடல், சலியாத மனம், அன்பு அகலாத மனைவி, தாழாத கீர்த்தி, மாறாத வார்த்தை, தடைகள் வராத கொடை, குறையாத நிதி, கோணாத கோல், துன்பமில்லாத வாழ்வு அனைத்தும் அருளுவாள்.

அகில உயிர்களுக்கும் அன்னையானவளும் அகில புவனத்தை ஆளும் அரசியானவளும் அருவாம் அறிவின் அக்கினி வடிவானவளும் அவமிலா மங்களம் அருளும் முதல்வியானவளுமான நாகம்மை நல்லருளை வாரி வழங்கும் வடிவினளாய் வீற்றிருந்து அலைகடலைத் தாண்டி தன் அருட் கடலை நாடி வருவோர்க் கெல்லாம் நல்வருள் சுரந்து காப்பாற்றுகின்றனள். அவளின் திருநிறை கடாட்சம் அண்மையில் நயினாதீவில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது எல்லா அழிவுகளையும் தன்வசமாக்கித் தம்மடியாரை இலபுறச் செய்தமை இந்நாளில் நாம் கண்ட அருட் செயல் எனலாம்.

கடலோரம் அமர்ந்துள்ள வேப்பமரச் சோலையிலே தடையேதுமில்லாது தனை வணங்குவோர்க்கு தன் அருள் வழங்கும் நாக பூஷணி அம்பிகையின் இவ்வாண்டு மஹோற்சவம் தவிர்க்க முடியாத காரணங்களால் சில காலம் பின்னேக்கி இன்று ஆகஸ்ட் ஐந்தாம்நாள் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பதினைந்து நாட்கள் வழமை போல திருவிழா நடைபெற அம்பிகை திருவருள் பாலித்துள்ளாள். பதினான்காம் நாள் இரதோற்சவமும் அதற்கு மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெற்று மறுநாள் தெப்போற்சவத்துடன் இனிது நிறைவுறும்.

நயினை மதியாபரணம் அம்பிகைபாகன்

---

### லண்டனில் காமன்வெல்த் மாநாடு

# தென்னுபிரிக்க நிலை ஆராய தயார் என்கிறார் தட்சர்

(லண்டன்)

**தென்னுபிரிக்க விடயம் குறித்து ஆலோசனை நடத்த பாரதம், அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளைக் கொண்ட ஒருங்கிணைப்புக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று ஸாம்பியா ஜனாதிபதி திரு. கெனத் கௌண்டா கோரிக்கை விடுத்துள்ளார்.**

லண்டனில் தற்போது நடைபெற்றுவரும் ஏழு நாடுகள் கலந்து கொள்ளும் சிறு அளவிலான காமன்வெல்த் மாநாட்டில் இக்கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

தென்னுபிரிக்காவுக்கு எதிரான நடவடிக்கைகளில் போதிய முன்னேற்றம் இல்லை என மேற்படி ஏழு நாடுகளினதும் தலைவர்கள் ஒப்புக்கொண்டனர்.

தென்னுபிரிக்க நிலை குறித்து ஆலோசனை நடத்தத் தான் தயாராக உள்ளதாக பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் தெரிவித்துள்ளார்.

இம் மாநாட்டில் கலந்து கொண்டோருக்கு அவர் பகல் விருந்தளித்துக் கௌரவித்தார்.

பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இங்கு பேசுகையில் தென்னுபிரிக்காவில் வெளிநாடுகளின் கடும் நெருக்குதலால் சற்று நிலை சீரடைந்துள்ளது என்று கருத்து வெளியிட்டார்.

---

## பருவ மாதர் மானபங்கம் இங்கே அதிகம்

(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் பருவ வயது மாதர் கற்பழிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

16 வயதுக்குட்பட்ட பெண்களே இவ்விதம் பாலியல் வேட்கைக்கு இரையாக்கப்படுகின்றனராம்.

இங்கு 1984ம் வருடத்தில் இவ்வாறு 22 பெண்கள் கெடுக்கப்பட்டனர், 1985ம் வருடத்தில் 20 பேர் கெடுக்கப்பட்டனர்.

இவ்வருடத்தில் முதல் ஆறு மாதங்களில் 20 பெண்கள் கெடுக்கப்பட்டதாக ஏ. எப். பி செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கிறது.

---

## நீதிபதி கொலை

(போகோடா)

சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவர் இங்கு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இக்கொலைக்கு எவரும் உடனடியாக உரிமை கோரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

---

## ஈராக்கில் அரபாத்

(பாக்தாத்)

மேற்காசிய விவகாரம் குறித்து ஆராயும் பொருட்டு பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் ஈராக் வந்துள்ளார்.

## விமான விபத்து

(மெக்ஸிக்கோ நகர்)

மெக்ஸிக்கோவில் சிறிய விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் 24பேர் காயமடைந்தனர்.

---

## மூளை செயலற்றுப்போன பெண் ★ பிரசவித்த சிசு ★

(வாஷிங்டன்)

அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள இடம் ஒன்றில் நிகழ்ந்துள்ள சம்பவம் ஒன்று சர்வதேச ரீதியிலான கவனத்தை ஈர்த்துள்ளது. 31 வயதான டெரிக்பூல் என்பவர் அடுத்த கிறிஸ்மஸ் அன்று 34 வயதான மாரிஒடர் ஹென்டேசன் என்ற ஆசிரியையைத் திருமணம் செய்வதாக நிச்சயிக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில் அவர் கர்ப்பவதியானார். அவரது மூளையில் சதை வளர்ச்சி ஏற்பட்டு அவரது மூளை இறந்தது என மருத்துவர்கள் அறிவித்தனர். இந்நிலையில் தன் மகளை வாழவைக்கும் முயற்சிகளை நிறுத்துமாறு அவரது பெற்றோர் மருத்துவரைக் கோரினர். ஆனால், இதற்கு எதிரான தீர்ப்பை காதலன் நீதிமன்றம் மூலம் பெற்றார். பெண்சிசு ஜனனமானது. ஆரம்பத்தில் இதன் ஆயுளில் வைத்தியர்கள் சந்தேகமுற்றனர். ஆனால், இப்போது ஆயுள் கெட்டி என நம்பிக்கை துளிர்த்துள்ளது.

---

### அமெ. அதிபர் கருத்து

# போதைவஸ்துக் கடத்தல் மரண தண்டனை ஏற்றதே

(வாஷிங்டன்)

போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனை விதிக்கப்படல் ஏற்புடையதே என அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனுல்ட் றீகன் 'நியூஸ் வீக்'கிற்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

இப்பழக்கத்துக்கு அடிமைப்பட்டோரைச் சிறையிலடைக்காமல் சிகிச்சையளிக்க வேண்டும் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

---

## கத்தி ஏந்தச்...

—4-ம் பக்கத் தொடர்ச்சி

ருக்கு வாய்ந்து இருந்தது. நாளதுவரை எம். ஜி ஆர். நிகழ்த்தி முடித்த தமிழ்நாடு மாநில நல்லாட்சியை நயந்து, தங்கத்தகடு போர்த்த வெள்ளிச் செங்கோல் ஒன்றை முதலமைச்சர் இராமச்சந்திரனுக்கு வழங்கிக் கௌரவித்தது ரசிதர் மன்றம். இரண்டு மீட்டர் நீளமுள்ள அச்செங்கோலை மன்றத்தின் சார்பில், அம்மாநாட்டு மேடைமீது முதலமைச்சருக்கு அன்பளிப்புச் செய்யும் பெருமை ஜெயலலிதாவுக்குக்கிடைத்தது.

(நாளை முடியும்)

---

## லயன்ஸ்கழக ஏற்பாடு

(வயாவிளான்)

அச்சுவேலியில் வளர்ந்தோர்களுக்கான தையல் பயிற்சி வகுப்பு ஒன்றினை ஆரம்பித்து பெண்களுக்கான சுயவேலை வாய்ப்பினை எற்படுத்த 'லயன்ஸ் கழகம்' தீர்மானித்துள்ளது,

அத்துடன் எமது கலையை வளர்க்கும் பரத நாட்டிய சங்கீத வகுப்புக்களையும் ஒழுங்கு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலி மகாவித்தியாலயக் கட்டத்தை பாடசாலையில்லாத காலங்களில் பயன்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த மாதம்கண் குறைபாடுள்ளவர்களுக்கு கண்ணுடி வளங்குவது போன்று இரண்டாம் கட்ட கண்ணுடி வளங்கலினை மேற் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஊனமுள்ளவர்களுக்கும் சமூக நலன் விரும்பிகளிடமிருந்தாவது உதவிகளைப் பெற்றுக் கொடுக்க லயன்ஸ் கழகம் ஊடகமாக நிற்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

அச்சுவேலி லயன்ஸ் கழகத் தலைவரும் யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத் தலைவருமான பேராசிரியர் பாலகிருஷ்ணன் இவ்விபரங்களைத் தெரிவித்தார்.

---

## வசதிகள் கிடைக்குமா?

(சங்கானை)

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் தினமும் நோயாளர்கள்கூட்டம் நிரம்பி வழிகின்றது.

கட்டிட வசதிகள் இல்லாத குறையும், போதிய தளபாடவசதிகள் இல்லாத நிலையும், மேலும், நோயாளர்கள் களைப்பான நிலையில் இருந்து ஆறுதல் பெறுவதற்கு வசதியாக வாங்குகள் கூடுதலாக இல்லாத பெருங்குறையும் எப்போது முற்றாக நீங்கும் என பொது நலன் விரும்பிகள் வினவுகின்றனர்.

பல கிராமங்களிலும் இருந்து பல மைல்தொலைவில் இருந்தும் பெருமளவு நோயாளர்கள் மேற்படி வைத்தியசாலையை நாடி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஈழமுரசு

## ஜே.வி.பியின் உறுப்பினர் ஒருவர் பொலனறுவ காட்டில் கைது!

தடை செய்யப்பட்ட ஜனதா விமுக்தி பெரமுனையின் உறுப்பினர் எனக் கருதப்படும் ஒருவர் பொலனறுவை மாவட்டத்திலுள்ள காட்டுப் பிரதேசத்தில் வைத்துகைது செய்யப்பட்டுள்ளார். குணசிறி என்னும் பெயர்கொண்ட இவர் பொலிசாரினல் கைது செய்யப்படும் சமயம் தோட்டாக்களை அடைத்துக் கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை இப்பிரதேசத்தில் ரோந்து சென்ற பொலிசாரின் மீது மற்றுமொரு குழுவினர் தாக்குதலை மேற்கொண்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

வண. பிதா பாலசூரியா சொல்கிறர்

# சிங்களவர் நடத்திய படுகொலைகளுக்கு பயந்தே தமிழர் இந்தியா ஓடினர்கள்!

"சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் இந்தியாவுக்கு எதற்காக ஓடினர்கள். இந்தியாவைத் தமது தாயகம் என எண்ணி அவர்கள் ஓடவில்லை. சிங்களவர்கள் நடத்திய படுகொலைகளுக்குப் பயந்தே ஓடினர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது" என்று வண. பிதா பாலசூரியா தெரிவித்தார்.

83 ஜூலையில் சுமார் ஒன்றே கால் லட்சம் தமிழர்களை அடித்துத் துரத்தியதற்காக சிங்கள மக்கள் தமது பிழையை மனதார உணர்ந்து அவர்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் எனவும் அவர் மேலும் சொன்னர்.

மத்திய மாகாண சமாதானக் குழுவின் ஆதரவில் கண்டியில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் அவர் சிறப்புரையாற்றினர்.

அண்மையில் இந்தியா சென்றிருந்த போது சிங்கள மக்கள் செய்த செயலுக்காக தமிழ் நாட்டில் தான் மன்னிப்புக் கோரியதாகவும் வண. பிதா பாலசூரியா தெரிவித்தார்.

"தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை அங்கீகரித்து, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்ற தீர்வொன்று முன்வைக்கப்படுமானல், அது நேர்மையாகவும், உண்மையாகவும் செயற்படுத்தப்படுமானல் அத்தீர்வை தாம் ஏற்றுக்கொள்வோம்" என்று தமிழகத்தில் போராளிகள் தலைவர்கள் தம்மிடம் தெரிவித்ததாகவும் அவர் இங்கு தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

ராணுவமும் ஊர்காவற் படையினரும் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதால்தான் தாங்களும் அவ்வாறு செய்ய முடியுமென்பதை நிரூபிப்பதற்காக எதிர்தாக்குதலை நடத்த நிர்ப்பந்திக்கப்படுவதாக போராளிகள் கூறுவதில் நியாயமுண்டு என்றும்வண பிதாபாலசூரியா மேலும் சொன்னர்.

## மாவை கந்தன் ஆலயத்தில்

## ஒருவதந்தியின்காரணத்தால் பக்தர்கள் நேற்று குறைவு!

(சுன்னுகம்)

நேற்று இராணுவ உயர் அதிகாரி மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு வழிபடவும், அர்ச்சனை செய்யவும் வரவிருப்பதான வதந்தி நேற்றும், நேற்று முன் தினமும் ஆலயச் சுற்றுடலில் பல பகுதிகளிலும் பரவியிருந்த காரணத்தால் ஆலயத்தில் முற்பகலில் சனக்கூட்டம் குறைந்திருந்தது. மாவிட்டபுரம்பிரதம குரு திருவிழாத் தொடங்குவது பற்றியும் திருவிழாக் காலப்பகுதியில் பாதுகாப்புப் படையினரால் அசம்பாவிதமேதும் நிகழாவண்ணமிருக்கவுமாக இந்து கலாச்சார அமைச்சருக்குக் கடிதமெழுதி அதன் பிரதியை பாதுகாப்புப் படை உயர் அதிகாரிக்கு அனுப்பியிருந்தார்.

ஏற்கனவே காங்கேசன் துறைப்பகுதி மக்களுக்கு பழக்கப்பட்ட இந்த உயரதிகாரி திரும்பவும் காங்கேசன்துறை முகாமுக்குப் பொறுப்பாக வந்துள்ளதால் ஆலயத்திற்கு வழிபட வரக்கூடுமென்ற எண்ணம் சிலருக்கு உருவானதாலேயே இவ்வதந்தி பரவியதாம்.

## நேற்றிரவு

நேற்றிரவு கோட்டை இராணுவ முகாம் பக்கமிருந்து பலத்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும், குண்டு வெடிப்புச் சத்தங்களும் தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டிருந்தது. ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. செய்தி அச்சுக்குப் போகும் போதும் குண்டு, ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்தவண்ணமேயிருந்தது.

## கந்தசாமி கைதாகி 50 நாட்கள் பூர்த்தியாகிற்று

ஈழநாடு பத்திரிகையின் கொழும்பு நிருபரான இ. கந்தசாமி அனுராதபுரத்தில் ராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டு ஐம்பது நாட்கள் பூர்த்தியாகிவிட்டன. தனியார் பஸ் ஒன்றில் பத்திரிகை அலுவலகத்திற்கு வெளிநாட்டுப் பத்திரிகைகள் அடங்கிய பார்ஸல் ஒன்றைக் கொடுத்து விட்டது தொடர்பாக விசாரணைக்கு மே மாதம் 14ம் திகதி அழைக்கப்பட்ட இவர், இன்னமும் விடுவிக்கப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## தர்மகுலசிங்கம் நினைவு தினம்

வடபகுதி இடதுசாரி இயக்கத்தின் முன்னோடியான அமரர் செ. தர்மகுலசிங்கம் (ஜெயம்) அவர்களின் நினைவு தினமும், 1953ம் ஆண்டு ஹர்த்தால் ஞாபகார்த்த தினமும் எதிர்வரும் 9ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் அன்றைய தினம் காலை 9 30க்கு இது தொடர்பாக நடைபெறவுள்ள கூட்டத்திற்கு தோழர் மாசிலாமணி தலைமை தாங்குவார்.

# திருமலைக் கிராமங்களிலிருந்து மேலும் பல தமிழ்க் குடும்பங்கள் வெளியேற்றம்

திருமலையிலுள்ள பல கிராமங்களிலிருந்தும் பெருமளவு தமிழர்கள் ஆயுதப் படைகளினதும், சிங்களக் காடையர்களினதும் தாக்குதல்களால் தொடர்ந்தும் அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கின்றுர்கள்.

இங்குள்ள சாம்பல்தீவு, சல்லி போன்ற பகுதிகளிலிருந்தே கூடுதலான தமிழர்கள் வெளியேறுகின்றுர்கள். கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் இங்கிருந்து சுமார் ஐநூறு தமிழர்கள் படகுகள் மூலமாக முல்லைத்தீவு வந்துள்ளார்கள்.

முல்லைத்தீவில் இவர்களுக்கு பல சமூக சேவை நிறுவனங்கள் பல்வேறு விதமான உதவிகளையும் செய்துவருகின்றன.

### முஸ்லிம்...

அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் என்பதே தமது விருப்பம் என்று சொன்னர்.

அது எப்படிச் சாத்தியமாகும் என்று கேட்டபோது, "தமிழ் அரசியல் வாதிகளும், போராளிகள் இயக்கங்களும் இணைந்து விட்டால், போட்டிக்கு இடமில்லை, அந்த நிலையில் தேர்தல் இல்லாமலே தமிழ் மாகாண சபை உருவாக முடியாதா?" என்று அமைச்சர் திருப்பிக் கேட்டார்.

தமிழினம் பிளவுபட்டஇனம் என்று சிங்களத் தலைவர்கள் எண்ணியுள்ளனர். இந்தத் தப்பான எண்ணத்தை முறியடிக்க மாகாண சபைத் தேர்தலை ஈழத்தமிழர்கள் ஒரு களமாகப் பயன்படுத்த வேண்டுமென்பதே தமது விருப்பம் எனவும் அமைச்சர் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

இந்திய அரசு வகித்துவரும் பங்கு பற்றி அமைச்சர் குறிப்பிடுகையில், எந்த முடிவையும் இலங்கைத் தமிழர் மீது இந்தியா திணிக்காது. தமிழர்கூட்டணியினர் அரசுடன் நடத்தும் பேச்சுவார்த்தையில் ஏற்றுக் கொள்ளும் தீர்வை செயற்படுத்துவதில் இந்தியா தனது முழு ஆதரவையும் வழங்கும் என்றுர்.

### அரச அதிபர்...

றது.

பலவந்தமாக கதவுகளை உடைத்து சிலர் உள்ளே சென்றதற்கான அறிகுறிகள் இங்கே காணப்படுகின்றனவாம்.

முன்னுள் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இங்கிருந்து சென்ற பின்னர் இவ்வாசஸ்தலம் தற்போதைய அரசாங்க அதிபரினல் பாவிக்கப்படவில்லை.

### ஒரு இரவில்...

பிரிக்கப்பட்டிருந்த போதும் உட் கதவுகளை உடைக்க முடியாததினல் கள்வர்களினல் உண்டியல் பணத்தை எடுக்க முடியவில்லை. கோவிலின் கதவுகள் பூட்டப்பட்டு உண்டியல் கோயிலுக்கு உள்ளேயே இருந்தது.

திருட்டும், திருட்டு முயற்சியும் இடம்பெற்ற இந்த நான்கு இடங்களும் அருகருகேயே அமைந்துள்ளன.

### லண்டன்...

இதனல் ராஜீவ் காந்தி விருந்து முடிந்த பின்னர் லண்டனிலுள்ள பாரதத்தூதர் அலெக்ஸாந்தரின் இல்லத்துக்குச் செல்ல நேர்ந்தது.

நள்ளிரவுக்குப் பின்னரே ராஜீவ் ஹோட்டலுக்குத் திரும்ப பொலிஸார் அனுமதித்தனர். இதே ஹோட்டலிலேயே ஜனதிபதி கவுண்டாவும், பஹிமாஸ் பிரதமரும் தங்கியுள்ளனர்.

## வானரோந்தும் குண்டு அடியும்

(சுன்னுகம்)

காங்கேசன்துறை, மயிலிட்டி கடற் பிராந்தியத்தில் நேற்று முற்பகல் பல பீரங்கிக்குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டன. கடலிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் நடவடிக்கையால் மீன்பிடிக்கச்சென்ற மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது. நேற்று நாள் முழுவதும் ஹெலிக்கொப்ரரின் ரோந்து நடவடிக்கையும் கரையோரப்பகுதிக் கிராமங்களின் மேல் தீவிரமாக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

### முகாமுக்கு...

அழைக்கப்பட்டனராம்.

நிறுவன இயக்குநர் ஒருவரும், ஆசிரிய பீட சிரேஷ்ட ஊழியர் ஒருவருமே முகாம் நோக்கிச் சென்று, புன்னலைக் கட்டுவனிலுள்ள 'சென்றி' இளைஞர்களால் திருப்பி அனுப்பப்பட்டவர்களாவர்.

### காணிப் பதிவு...

இனம் தெரியாதவர்களால் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதனைத்தவிர வேறு சில உறுதிகளில் ஒட்டப்பட்டிருந்த சுமார் நான்காயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளும் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாம்.

யாழ். மாவட்ட நீதிமன்ற வளவுக்குள் நீண்டகாலமாக இயங்கி வந்த காணிப்பதிவு அலுவலகம் பாதுகாப்புக் கருதி அண்மையிலேயே பழைய பூங்கா கட்டடத்துக்கு மாற்றப்பட்டது.

## கடல் ரோந்தால் மக்கள் கலக்கம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக் கரையோரக் கடற்பிராந்தியத்தில் கடற்படைப் படகுகளின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இரண்டுக்கும் மேற்பட்ட கடற்படை படகுகளுடன் விசைப் படகுகளும் கடந்த சில தினங்களாகக் கடலில் காணப்படுகின்றன. அத்துடன் பிரமாண்டமான கப்பல் ஒன்றும் நங்கூரமிட்டிருந்ததைக் கண்ட மக்கள் இவற்றின் நடமாட்டம் குறித்து அச்சம் தெரிவித்தனர்.

## வர்த்தகர் சங்கத்தின் நிதியுதவி

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட குருநகர் மீனவர்களின் குடும்பத்தினர்க்காக யாழ். வர்த்தகர் சங்கத்தால் சேகரிக்கப்பட்ட 12,520 ரூபா உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர் சங்கச் செயலாளர் திரு. சி. நமசிவாயம் தெரிவித்தார்.

### இராணுவத்தின்...

பட்ட தாக்குதலினல் இராணுவத்தினர் மேலும் அச்சமடைந்தனர். இதனலேயே படையினரின் குடும்பங்களுக்கு திடீர் 'சுகயீனம்' ஏற்பட்ட அற்புதம் நிகழ்ந்தது. ஹெலிகொப்டரிலிருந்து இயக்க மோதல்களை தூண்டிவிடும் ரீதியில் பிரசுரங்கள் தொடர்ந்து வீசப்படுகின்றன. இராணுவ அதிகாரிகளின் தந்திரங்களில் ஏமாறாது, சூழ்ச்சிப் பொறிக்குள் சிக்காது விடுதலை இயக்கங்களுடன் ஒன்றுபட்டு போராட மக்கள் தயாராக வேண்டுமென இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலய உற்சவங்கள்

(புங்குடுதீவு)

சரவணை சின்னமடுமாதா தேவாலய வருடாந்த நவநாள் உற்சவம் இன்று காலை நிகழும் பெரிய பாடற் பூசையுடனும், திருச்சுரூப சுற்றுலாவுடனும் பூர்த்தியடையும். பெருந்திரளான பக்தர்கள் இதிற் கலந்து கொள்வர். விசேட போக்குவரத்து வசதிகள் யாத்திரிகர்களின் நலன்கருதி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* *

சரித்திரப் புகழ்பெற்ற நயினதீவு ஸ்ரீ நாகபூஷணியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று (5.8.86) காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். சிவஸ்ரீ வை. மு பரமசாமிக் குருக்கள் கொடியேற்றக் கிரியைகளை நடத்துவார். ஆலய அறங்காவலர் சபையினர்இதற்கான சகல ஒழுங்குகளையும் செய்துள்ளனர்.

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தான (சிவன் கோவில்-பருத்தித்துறை) அம்பாள் உற்சவம் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரதோற்சவம் நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கும், ஆடி பூர உற்சவமும், தீர்த்தோற்சவமும் 8ம் திகதி முறையே காலை8 30 மணிக்கும், காலை 10 30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

## கியூபா டாக்டர்கள் வந்துள்ளனர்

அனுராதபுரம், அம்பாறை மாவட்டங்களிலுள்ள கிராமிய வைத்தியசாலைகளில் பணிபுரிவதற்கென கியூபாவிலிருந்து எட்டு டாக்டர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். இந்த எட்டு வெளிநாட்டு வைத்தியர்களும் சத்திரசிகிச்சை, குடும்ப வைத்தியம், சருமவியாதி, தொற்று நோய், சுகாதாரம் ஆகிய துறைகளில் விசேட பயிற்சி பெற்றவர்கள்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 5-8-1986 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22487